# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.81/2022

வா.சா.2– குறுக்கு விசாரணை – நாள் 27–01–2026.

பெயர் = ரம்யா வா.சா.2

வா.சா.–2 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் கு.வி.–

(1) என் கணவர் என்ன வேலை பார்க்கிறார் என்றால் தறி வேலை பார்க்கிறார். திருமணத்தின்போது மில்லில் வேலை பார்த்தார். எண்ணெய் வியாபாரம் பார்த்தாரா என்றால் மில்லில் வேலையில்லாதபோது கொரானா காலத்தில் எண்ணெய் வியாபாரம் பார்த்தார். என் அப்பாவிடம் சம்பளத்திற்காக என் கணவர் எண்ணெய் வியாபாரம் செய்தார். தானசெட்டில்மெண்ட் எழுதும்போது எங்கள் வீட்டில் தான் குடியிருந்து வந்தோம். என் மாமனாரும், மாமியாரும் அதே வீட்டில்தான் இருந்தார்கள். என் மாமனார் வீட்டைவிட்டு எப்போது வெளியே போனார் என எனக்குத் தெரியாது. மாமனார் வீட்டை விட்டு வெளியே சென்றுவிட்டார் என்றால் ஆமாம் வீட்டை எழுதிக்கொடுத்துவிட்டு கொஞ்சநாள்கழித்து சென்றுவிட்டதாக சாட்சி கூறுகிறார். மாமனாரையும், மாமியாரையும் நாங்கள் சரிவர கவனிக்காததால் அவர்கள் வீட்டை விட்டு வெளியே சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. 6 மாதம் நாங்கள் கவனிக்காததால் சொந்தக்காரர்கள் வீட்டில்தான் இருந்துவந்தார்கள் என்றால் சரியல்ல. இதுசம்பந்தமாக பெரியவர்கள் மூலம் பஞ்சாயத்து பேசினார்கள் என்றால் அதுசம்பந்தமாக பேசவில்லை என சாட்சி கூறுகிறார். பெரியவர்கள் மூலம் பேசினார்கள் அதனை வழக்கிற்காக இல்லை என மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

(2) நாங்கள் நகராட்சி இடத்தை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியுள்ளோம் என்றால் நான் திருமணமாகிவரும்போதே வீட்டிற்கு பின்புறம் கட்டிடம் இருந்தது என்று சாட்சி கூறுகிறார். என் கணவரின் தம்பி தூண்டலின்பேரில் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாக வழக்கிற்காக நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் என் மாமனார், மாமியாரை சரியாக கவனிக்காமல் வெளியே அனுப்பியதால்தான் என் கணவருக்கு எழுதிக்கொடுத்த

தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் கொடுத்த புகாருக்கு என் கணவர் ஆஜராகிவிட்டு பின்னர் விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்துவிட்டார் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அங்குசெல்லவில்லை என சாட்சி கூறுகிறார். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாகவே தானபத்திரத்தை ரத்து செய்ய உத்தரவாகிவிட்டது என்றால் சரியல்ல. தற்போது நாங்கள் தாவாச்சொத்தில் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவின்பேரில் காவல்நிலையத்தில் புகார் செய்யப்பட்டு தாவா சொத்தில் யாரும் குடியிருக்கவில்லை தற்போது அந்த வீடு பூட்டிதான் கிடக்கிறது என்றால் சரியல்ல. நாங்களும் மாமனார், மாமியாரும் வெளியேதான் குடியிருக்கிறோம் வீடு பூட்டிதான் கிடக்கிறது என்றால் சரியல்ல. தற்போது வரை வீட்டுவரி, தண்ணீர்வரி, மின்கட்டணவரி ஆகியவை என் மாமியார் பெயரில்தான் உள்ளது. தானசெட்டில்மெண்ட் ரத்தாகிவிட்டதால் மேற்படி வரி செலுத்துவதில் எங்கள் பெயருக்கு மாற்ற முடியவில்லை என்றால் சரியல்ல. வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவுப்படி தானசெட்டில்மெண்ட் ரத்தாகிவிட்டது ஊர்ஜிதத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.01.27 12:41:52 +0530